(2) PANEL OF VICE-CHAIRMEN.

MR. CHAIRMAN : I have to announce to the House that, under rule 14 of the Tamil Nadu Legislative Council Rules, I have nominated the following Members of the Legislative Council to be the Panel of Vice-Chairmen for the Fortieth Session of the Legislative Council under the Constitution :

1. THIRU G. Swaminathan.
2. THIRU T. K. Ponnuvelu.
3. THIRU R. Krishnaswamy Naidu.
4. THIRU M. Rajah Iyer.

IV. GOVERNMENT RESOLUTION.

RATIFICATION OF THE CONSTITUTION (TWENTY-FOURTH) AMENDMENT BILL, 1971.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே,

"பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு 1971-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (24-வது திருத்த) மசோதாவினால் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருபவையுமான திருத்தங்களை இம்மன்றம் இசைவுடன் உறுதிப்படுத்துகிறது"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மேலவைத் தலைவர் அவர்களே, அரசியலமைப்புச் சட்டத்தின் 1971-ம் ஆண்டு (24-வது திருத்த) மசோதா, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்யக் கருதியுள்ளது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டுள்ள இம்மசோதா, இப்பொழுது இம்மன்றத்தின் ஏற்பளிப்பிற்காக அனுப்பப்பட்டுள்ளது. இம்மன்றம் இதனை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென நான் முன்மொழிகிறேன். இந்த மசோதா அரசியலமைப்புச் சட்டத்திற்கு சில திருத்தங்களைக் கொண்டு வருகிறது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளால் நிறைவேற்றப்பட்டுள்ள இம்மசோதா அரசியலமைப்புச் சட்டத்தின் 13-வது பிரிவையும் 368-வது பிரிவையும் திருத்த முயல்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் 13 (2) பிரிவில் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது :

3-வது பாகத்தில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை எடுத்துவிடும் அல்லது சுருக்கும் சட்டம் எதையும் அரசு இயற்றக்கூடாது ; இந்தப் பகுதிக்கு முரணாகச் செய்யப்படும் சட்டம் எதுவும் அவ்வாறு முரணாக இருக்கும் அளவுக்கு பயனின்றிப் போகும் ; இதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமுடையதாகும். அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவது